# DIOCESAN CIRCULAR LETTERS

**No. C-27/2018** **28.12.2018**

## முத்திப்பேறுபெற்ற மறைசாட்சி தேவசகாயம் விழா மறைமாவட்டத் திருப்பயணம்

**14.01.2019**

பாலன் இயேசுவில் எனக்கு மிகவும் பிரியமான சகோதரிகளே, சகோதரர்களே, உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் திருக்காட்சிப் பெருவிழாவின் நல்வாழ்த்துக்கள்!

குமரி மாவட்டத்துக்கு, நமது மறைமாவட்டங்களுக்கு, தமிழகத்திற்கு, ஏன், இந்திய நாடு முழுவதற்குமே இறைவனால் தரப்பட்டுள்ள சிறந்த கொடை முத்திப் பேறுபெற்ற மறைசாட்சி தேவசகாயம். அவரைப் பற்றியும், இவ்வாண்டு நாம் சிறப்பிக்கவிருக்கும் அவரது திருவிழாவைப் பற்றியும் உங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்.

### பிறப்பு:

இன்றைய குமரிமாவட்டப் பகுதி அன்று தென்திருவிதாங்கூர் என்று அழைக்கப்பட்டது. இங்கு, நட்டாலம் என்னும் ஊரில் வாசுதேவன் நம்பூதிரி, தேவகி அம்மா என்ற கடவுள் பக்தியுள்ள, உயர் நடுத்தரக் குடும்பத்தில் 1712ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் தேதி நமது மறைசாட்சி பிறந்தார். அவருக்கு "நீலம்" என்னும் பெயர் இடப்பட்டது. பின்பு அது நீலகண்டன் என்றும் சொல்லப்பட்டது. "மருமக்கதாயம்" என்னும் நாயர்-நம்பூதிரி முறைப்படி தமது அன்னையைப்போல் இவரும் நாயர்குலத்தவராகக் கருதப்பட்டார். எனவே பிற்காலத்தில், சமுதாயத்தில் அவர் உயர்நிலை பெற்றபோது "பிள்ளை" என்னும் அடைமொழியையும் கொண்டு அழைக்கப்பட்டார்.

### வளர்ப்பு:

இளமையில் நீலம் என்ற நீலகண்டன், தமிழ், மலையாளம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும், மற்றும் தற்காப்புக் கலைகளையும் போர் பயிற்சிகளையும் பெற்றார்.

### பணி:

நீலகண்டன் அரசனின் படையில் சேர்ந்து சில ஆண்டுகள்